**மாவனல்ல பிரதேச சபை - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மாவனல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தும் தகவல்களின் பொழிப்புடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவனல்ல பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்.ஏயூ.எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, தொடர்புடைய தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்

மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டில் உல்லாச வரி வைப்பாக வைத்துள்ள ரூபா 787,500 தொகையை வருமானத்திற்கு எடுத்திருக்வில்லை. | அத் தொகையை விரைவில் தீர்ப்பதென. | கணக்கை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | கணிப்பீட்டுச் சபை அறிக்கை பிரகாரம் நூலக புத்தகங்களின் பெறுமதியை விட ரூபா 648,014 தொகை குறைத்து அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் 03 நூலகங்களின் 662 புத்தகளின் பெறுமதியும் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆண்டில் உள்ளவாறான புத்தகப் பெறுமதியை செம்மையாக்குவதென. | - மேற்படி - |
| (இ) | எவ்வித உடன்பட்ட கடப்பாடும் இல்லாதிருக்கும் போது ரூபா 4,000,000 ஆன கடன்கொடுனர் ஒதுக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரிசெய்வதென. | - மேற்படி - |
| (ஈ) | 2021 ஆண்டு முதல் பண்டக கணிப்பீட்டின் மூலம் இனங்கண்ட ரூபா 182,999 ஆன பற்றாக்குறையை பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட அல்லது வேறு பொருத்தமானவற்றை செய்திருக்கவில்லை. | பொறுப்புவாய்ந்த நபர்களிடம் இருந்து பற்றாக்குறையை அறவிடுகிறேன். | - மேற்படி - |
| (உ) | ஆண்டு 2016 – 2021 இடையிலான காலத்தினுள் கிடைக்க வேண்டிய ரூபா 3,088,210 ஆன முத்திரை கட்டணதிற்காக செலுத்த வேண்டிய ஆளணியினர் படிகளை கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் கணக்கீடு செய்வதென. | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 09 இல் நிதிக்கூற்றுக்கள் பிரகார பெறுமதி மற்றும் அதற்குரிய நேரொத்த அறிக்கை பிரகாரம் மீதிகளிற்கு இடையில் ரூபா 4,765,765 ஆன வித்தியாசம் நிலவியது. | 2024 ஆண்டில் சரிசெய்வதென. | வித்தியாசத்தை இணக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 27,882,783 ஆன நடைமுறையல்லா சொத்துக்களிற்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2024 ஆண்டில் சரிசெய்வதென. | சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டம்<br>--------------------------- | | | |
| | I–24 ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான 2,364 பாதைகளில் 649 பாதைகளை மாத்திரம் வர்த்தமானியில் பிரசுறிக்க நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இனங்காணாத பாதைகளை இனங்காண முயற்சி எடுத்திருக்கவில்லை. | அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுறிக்க ஆவணங்களை பூர்த்தி செய்துள்ளதாக மற்றும் இனங்காணாத பாதைகளை இனங்கண்டு இன்வென்றியில் உட்படுத்துவதென. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | 158 ஆம் பிரிவு | 15 பாதைளின் 797 குத்தவைதாரர்களின் நிலுவை ரூபா 3,703,229 தொகை 03 ஆண்டுகளிற்கும் 30 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழமையாகும். | நிலுவை வீதவரிக்காக ஆதனத் தடை செய்வதெனவும், நிலுவை ஏக்கர் வரிக்காக ஆதன மீள்மதிப்பீடு செய்வதென. | மேற்படி |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371 (2) (இ) | 02 ஆண்டுகளிற்கும் 24 ஆண்டுகளிற்கும் இடையிலான காலம் பழமையான ரூபா | 2024 ஆண்டு இறுதிக்கு முன்னர் தீர்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 375,632 ஆன முற்பணம் 2023 ஆண்டிறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 (3) | 03 ஆண்டுகளை விடவும் பழமையான செலுத்த வேண்டிய கலப்பு, நீர் சேவை, அரங்க வைப்பு மற்றும் வேலை உடன்படிக்கை பிணை வைப்பு ரூபா 1,727,212 வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க முன்னர் தீர்பதெென. | மேற்படி |
| (இ) | 2020 ஒக்டோபர் 02 திகதிய இலக்கம் 05/2020 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2017 ஆண்டு முதல் செயற்படாத ரூபா 22,786,422 ஆன சபைக்கு சொந்தமான 05 வாகனங்கள் மற்றும் இயந்திரமொன்றை பராதீனம் செய்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களையும் இனங்கண்டு பராதீனம் செய்வதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1988 மே 17 இன் 1988/22 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் 2 பந்தி | 5 ஆண்டுகளிற்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய வீதவரி மதிப்பீடு 2009 ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படாததால் புதிய மதிப்பீட்டின் மூலம் பெற்றுக் கொள்ள இயலுமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டிற்கு உரிய ஆதனங்களை அளவையிடல் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதென. | மேற்படி |
| (உ) | இலக்கம் 8/2010 கொண்ட உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கையின் 5 பந்தி | அநேகமாக நகரமயமாகி உள்ள பிரதேசங்களை இனங்கண்டு மலசல வடிகால் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையான திட்டமொன்றை தயாரிக்க அலுவலர்களை அறிவுறுத்துவதென. | மேற்படி |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,347,746 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 52,521,177 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான வகை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **துிசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில்லிட்ட வருமானம்** | **சேகரித்த வருமானம்** | **துிசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 15,972,463 | 14,522,224 | 19,000,551 | 13,646,172 | 16,176,590 | 13,181,823 | 11,900,439 | 14,009,150 |
| வாடகை | 51,898,279 | 36,868,961 | 31,733,747 | 11,163,365 | 38,110,150 | 33,994,565 | 32,114,790 | 19,189,954 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 5,875,500 | 2,401,395 | 2,158,269 | 4,916,278 | 4,260,300 | 4,303,669 | 2,645,739 | 3,875,698 |
| ஏனைய வருமானம் | 29,379,000 | 30,713,688 | 10,405,778 | 15,918,578 | 21,713,500 | 16,408,056 | 11,877,377 | 394,992 |
| மொத்தம் | 103,125,242 | 84,506,268 | 63,298,345 | 45,644,393 | 80,260,540 | 67,888,113 | 58,538,345 | 37,469,794 |

### 2.2.2. வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வீதவரி குத்தகை 797 இன் ரூபா 3,703,228 ஆன நிலுவை 03 ஆண்டுகள் மற்றும் 30 ஆண்டுகளிற்கு இடையிலாக காலம் பழமையாகும். | ஆதனத் தடை செய்தலை தற்போது கட்டம் கட்டமாக மேற்கொள்வதென. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வீதவரி, வாடகை, நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் மீதி ரூபா 107,320,929 ஆனதுடன் அதனுள் 05 ஆண்டுகளைவிட பழைய ரூபா 10,040,665 ஆன மீதி நிலயது. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மின்வலு மற்றும் சக்திவலு அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் தேவையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்ததுடன் பொருத்திய எண்ணிக்கையை கூட கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதென. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது செயற்பாடுகளிற்காக ஒதுக்கிய 08 ரூட் 36 பர்சஸான 02 காணித் துண்டுகளை இது வரை சுவீகரித்திருக்கவில்லை. | சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சொத்துக்களின் உரிமை பிச்சினையற்றதாக இருக்க வேண்டும். |
| (இ) | 2023 ஆண்டிற்காக 12 கடையறைகளும், வியாபார உரிமையை குத்தகை வழங்கல் 10 இற்குமாக மூன்றாம் முறையும் டெண்டர் சமர்ப்பிக்கப்படாததால் ரூபா 9,038,913 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குறைந்தபட்ச விலையை திருத்தி அங்கீகாரம் பெற்றுக் கொள்வதென. | வருமானத்தை தாமதமின்றி திரட்ட வேண்டும். |
| (ஈ) | கடையறைகளில் இருந்து மற்றும் வியாபார உரிமையை குத்தகை வழங்கிய டென்டர்தாரர்களி இடமிருந்து 2002 முதல் 2018 வரையான காலத்தினுள் நிலுவை ரூபா 173,723 தொகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறே 2020-2021 காலத்திற்குரிய ரூபா 6,529,521 தெகையை பதிவழிக்க உதவி ஆணையாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. | இத்றகாக மேற்கொள்ளும் ஆரம்ப புலனாய்வின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதெனவும், 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் நிலுவை மற்றும் தண்டப் பணத்தை பதிவழிக்க ஆளுனர் அங்கீகாரம் கிடைத்ததென. | - மேற்படி - |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாணிக்க எதிர்பார்த்த ஹெம்மாத்தகம கடையறை கட்டிடத் தொகுதியின் கிடைக்க வேண்டிய முற் செலுத்தலாக (key money) கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,607,774 தொகை 22 ஆண்டுகளை விட பழமையானதாகும். | அந் நிர்மாணம் இடை நடுவே நின்றுள்ளதாகவும் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணமும் பழுதடைந்த நிலையில் காணப்படுவதெனவும். | நிர்மாணத்தை மேற்கொண்டு வருமானம் உழைத்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | மாவனல்ல பேரூந்து தரிப்பிட அருகில் 1.12 பர்சஸ் நிலத்தில் நிர்மாணிக்கப்படும் அனுமதியற்ற இரண்டு மாடிக் கட்டிடத்தை அகற்ற இது தவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திட்டம் தவிசாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எழுத்து மூலம் அறிவித்த போதும் இதனை அகற்றாத காரணத்தால் அதனை முறையாக்க, இழப்பீடு செலுத்தாத உடன்படிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாகவும், இது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவினால் விசாரணை நடாத்துவதென. | குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ | சபைக்கு சொந்தமாக 2364 பாதைகளில் 1715 பாதைகள் வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்டு இருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான பாதைகளாக வர்த்தமானி மூலம் அறிவிப்பதென. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய ரூபா 4,126,606 தொகை 3 ஆண்டுகள் பழமையானதுடன் ரூபா 455,454 ஆன மீதி 5 ஆண்டுகளை விட பழமையானதாகும். | அந்த மீதியை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதெனவும் 03 ஆண்டுகள் பழைய நிலுவை கடயறை வாடகைக்காக ஆரம்ப புலனாய்வொன்று இடம்பெறுவதெனவும். | கிடைக்க வேண்டிய மீதியை தீர்க்க வேண்டும். |
| (உ) | செலுத்த வேண்டிய வேலைகள் மற்றும் நானாவித கடன்கொடுனர் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 17,800,070 ஆனதுடன் அவற்றில் ரூபா 959,000 தொகை 3 ஆண்டுகளை விஞ்சிய மீதியாகும். | அத் தரப்பினரை அறிவூட்டி செலுத்த அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதென. | கடன்கொடுனர் மீதியை தீர்க்க வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகார ஆளணி எண்ணிக்கையில் 13 பேர்களின் மிகை மற்றும் 21 வெற்றிடங்கள் நிலவியதுடன் 04 ஊழியர்களிற்கு நிரந்தர பதவிக்கு உரித்தற்ற ஏனை நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டு இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புதல் பிரதான அமைச்சின் ஊடாக இடம்பெறுவதனால், ஏனைய நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள 4 ஊழியர்களையும் திட்டவட்டமான இனங்காண முடியாததால் சரியான பதிலை வழங்க முடியாதென. | வெற்றிடங்களை நிரப்பி மிகை ஊழியர்களை ஏனைய நிறுவனங்களிற்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களிற்காக வேறு பதவிகளின் ஊழியர்கள் சாரதிகளாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | போதியளவு சாரதிகள் இல்லாதுள்ளமை. | நிரந்தர சாரதிகளை இணைக்க வேண்டும். |
| (ஆ) | பயன்பாடற்ற சான்றிதழை பெற்றுக் கொள்ளாததால் 2017 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரையும் பயன்படுத்தாது காணப்படும் 04 வாகனங்களிற்காக வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக்காக ரூபா 171,085 விளைவற்று செலவிடப்பட்டு இருந்தது. | அலுவலர்கள் இது தொடர்பாக அறிந்திராததால் இந்த விளைவற்ற செலவினம் ஏற்பட்டுள்ளதுடன் தற்போது தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | பயன்பாடற்ற சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | கம்பெக்டர டேலர், கொம்போஸ்ட் தொட்டிக்கு செலுத்துவதற்கான பாதை பொருத்தமற்ற காரணத்தால் கிடைந்த திகதி முதல் 06 வருட காலமாக விளைவற்று நிலவியது. | ஒப்படைக்க இது வரை நிறுவனமொன்று முன்வரவில்லையென. | சொத்துக்கள் பயன்பாடற்று இருக்கக் கூடாது. |